பிறகு 3 மாதம் 4 மாதத்திலே அந்தக் கிணறு வற்றிவிடு மானால் மறுபடியும் பம்ப் செட்டும் வேலை செய்யாது கிணற்றிலேயும் தண்ணீர் இருக்காது. எனவேதான் குறைந்தது 500 அடியிலிருந்து 700 அடி இடைவெளி இருக்க வேண்டு மென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். அது மட்டும் அல்ல. இன்னொரு விளக்கம் தந்தால் மாண்புமிகு உறுப்பினர் விடை அளித்ததாகத் திருப்தி அடைவார் என்று நினைக்கிறேன். கடன் கொடுக்கக் கூடிய அந்தப் பணத்தை நம்முடைய அரசாங்கம் நாபார்டிலிருந்து பெற்றுதான் கொடுக்கிறது. அந்த விதிமுறைகளைக் கட்டாயமாக அமல் படுத்த வேண்டும் என்று சொல்வதே நாபார்ட்தான். எனவே நாபார்ட் தான் அதை பரிசீலிக்க வேண்டுமே தவிர நம்முடைய அரசு பரிசீலிக்க முடியாது.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் அமையும் விவசாயக் கிணறுகளுக்கு இடையில் இருக்க வேண்டிய இடைவெளிக்கு ஏதேனும் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல நீலகிரி மற்றும் கொல்லிமலைப் போன்ற மலைப் பாங்கான பிரதேசங்களில் நல்ல நீர் வளம் இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளுக்கு இடைவெளி தூரம் 100 மீட்டராக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனை ஏழை விவசாயிகளுக்கு அளிக்கிறோம். ஒரு ஏழை விவசாயி தண்ணீர் பாய்கின்ற அள வைப் பார்த்து தன்னுடைய எல்லையிலே கிணறு எடுத்து விடுகிறார். பக்கத்திலே இருக்கிற ஏழை விவசாயிக்கு 700 அடி விஸ்தீரணமே இல்லாத போது அந்த விவசாயி எப்படி கிணறு எடுக்க முடியும் என்ற காரணத்தால் இது போன்ற விவசாயிகளுக்காவது அந்தச் சலுகை வழங்கப்படுமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அந்த மாதிரி சலுகைகள் வழங்குதாக இப்போது உத்தேசம் இல்லை.

ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்குதல்.

181—(*வினா எண். 66) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலப்பள்ளி துவக்கக் கோரி மனு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1989 மே 2]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டம் சவரம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி துவக்கக் கோரி மனு ஏதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆதி திராவிட மாணவ மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கு வருமான வரம்பை உயர்த்துதல்

182—(*வினா எண்: 2061) திரு. இளம்வழுதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் கல்வி உபகாரச் சம்பளம் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பை உயர்த்த அரசுக்குக்கோரிக்கைவந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவா அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பாகிய ரூ. 12,000-ஐ உயர்த்துவதற்கு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசின் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை 1989-90ஆம் கல்வியாண்டிலிருந்து ரூ. 12,000-ல் இருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுது முடிக்கும் முன்னரே குழந்தையின் பசி அறிந்து பாலூட்டும் தாயைப் போல் விளங்குகின்ற நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் இந்தக் கேள்வியைக் கேட்டு அது அட்மிட் ஆவதற்குள் இந்த 12,000-மாக இருந்த வருமான வரம்பை ரூ. 15,000-மாக உயர்த்தி அறிவித்து விட்டார்கள். அதற்காக எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அடுத்து மத்திய அரசு நிர்ணயித்து உள்ள வருமான வரம்பை மேலும் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.